தேதி: 22-06-2022

O.S. No. 389/2014

பி.வ.சா.2 திரு.சண்முகம்

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை:

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் விபரங்களை யார் கூறினார்கள் என்றால் நான் தான் கூறினேன். கருப்பண விருதுள்ளார் எனது தகப்பனாரின் தகப்பனார். கருப்பண விருதுள்ளாருக்கு, பெருமாள், காளியப்பன், முத்து, பிச்சை, மாரியாயியம்மாள், பாப்பு என்கிற கருப்பாயம்மாள் ஆகியோர் மக்கள் என்றால் சரி. எனது அப்பா பெயர் காளியப்பன். எனது தம்பிகள் ஆறுமுகம் மற்றும் மாரியப்பன். வாதிகள் கருப்பண விருதுள்ளாரின் வாரிசுகளின் வாரிசுகள் என்றால் சரி. கருப்பண விருதுள்ளார் உயிரோடு இருக்கும்போது 20.01.1968-ம் நாள் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. கருப்பண விருதுள்ளார் 04.11.1969-ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரி. வழக்குச் சொத்து 46 செண்ட் நிலமானது உயிலில் குறிப்பிடவில்லை என்றால் சரி. உயிலில் இல்லாத 46 செண்ட் நிலத்திற்காக தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. டவுண் பஞ்சாயத்தில் நான் Executive Officer ஆக பணியாற்றி ஓய்வு பெற்றேன். பாலசமுத்திரத்தில் எத்தனை நாட்கள் வேலை பார்த்தீர்கள் சுமார் 6 ஆண்டுகள் இருக்குமா என்றால் E.O. இல்லாத சமயங்களில் கூடுதல் பொறுப்பாக வேலை பார்த்துள்ளேன். வழக்குச் சொத்தில் பரமசிவம் என்பவர் அவரது மனைவியுடன் குடியிருக்கிறார் என்றால் இல்லை. வாதிகளும் சேர்ந்து தான் 46 செண்டில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் இல்லை. 46 செண்ட் நிலத்தை பொறுத்து ஆண் வாரிசுகளுக்கு தான் பாத்தியம் உள்ளது என்று கருப்பண விருதுள்ளார் உயில் போன்று ஆவணம் எழுதியுள்ளாரா என்றால் இல்லை. நீங்கள் E.O. ஆக இருந்த நிலையை பயன்படுத்தி வழக்குச் சொத்திற்கான வரி விதிப்பை உங்கள் பெயருக்கு மாற்றி பெற்றுக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் உங்களிடம் வரி செலுத்த பணம் கொடுத்து அதையும் நீங்கள் பெற்றுக்கொண்டு வாதிகளின் பெயரை சேர்க்காமல் உங்கள் பெயரிலேயே வரிகள் செலுத்தி வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து பட்டா வாதிகள் பெயரிலும், உங்கள் பெயரிலும் கூட்டாக இருக்கிறது என்று சொன்னால் சரி என்று சாட்சி கூறிவிட்டு மீண்டும் வாதிகள் பெயரில் இல்லை என்று கூறி தன் பெயரிலும், தன் தம்பி பெயரிலும் உள்ளது என்று

கூறினார். பட்டா உங்கள் பெயரிலும், உங்கள் தம்பி பெயரிலும் இல்லை என்றால் சரியல்ல. பட்டாவை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1-ம் வாதிக்கும், 4-ம் வாதிக்கும் கருப்பண விருதுள்ளார் சீர் வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. 1, 4 வாதிகளுக்கு கருப்பண விருதுள்ளார் சீர் வரிசைகள் செய்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, நகை நட்டு போட்டு தான் கல்யாணம் செய்து கொடுத்தார். வழக்குச் சொத்தில் நீங்களும், உங்கள் தம்பியும் வீடு கட்டி குடியிருந்து வருகிறீர்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். அதை தவிர வேறு ஆவணங்கள் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதிகளும் இதுநாள் வரை வழக்குச் சொத்தில் கூட்டாக தான் அனுபவம் செய்து வருகிறார்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து கருப்பண விருதுள்ளாரின் சொத்து, கருப்பண விருதுள்ளாரின் வாரிசுகளுக்கு சொத்தில் உரிமை உள்ளது, அதே போன்று கருப்பண விருதுள்ளாரின் வாரிசுகளின் வாரிசுகளான வாதிகளுக்கும் வழக்குச் சொத்தில் பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுடன் சேர்ந்து நீங்களும் வழக்குச் சொத்தில் கூட்டுச் சுவாதீனத்தில் இருந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கும் வழக்கு சொத்தில் பாகம் உள்ளது, எனவே வாதிகள் கோரியுள்ள படி அவர்களுக்கும் பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல, அவர்களுக்கு பாகம் இல்லை. 1 முதல் 3 வாதிகளுக்கு வழக்குச் சொத்தில் தலா 1/6 பாகமும், 4, 5 வாதிகளுக்கு தலா 1/18 பாகமும், 5 முதல் 8 வாதிகளுக்கு தலா 1/30 பாகமும் பாத்தியம் என்றால் சரியல்ல. வாதிகளுக்கும், உங்களுக்கும் மனஸ்தாபம் உள்ளதா என்றால் இல்லை. நீங்கள் தான் வாதிகளுக்கு பாகம் இல்லை என்று மறுத்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல, சுப்புலட்சுமி திருமணம் செய்யும்போது நகை மட்டும் போதும் நிலம் வேண்டாம் என்று கூறிச் சென்றுவிட்டார். அவர் அவ்வாறு சொல்லவில்லை நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு வழக்கில் கோரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

K HARIHARAN

Digitally signed by K HARIHARAN
Date: 2022.06.23 10:50:26 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.